# சலுகைகளுக்காக இயேசுவை மறுதலிக்காதே.

எனக்கு ஒரு குடும்பத்தை தெரியும் அவர்கள் ஏழைகள் தான். இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராய் ஏற்று கொண்டார்கள். தங்கள் பிள்ளைகளின் மதத்தை பற்றி பள்ளியில் கிறிஸ்தவன் என்று கொடுத்தார்கள் அவர்களுடைய உறவினர்கள் எல்லாம் கிறிஸ்தவன் என்று கொடுத்தால் உன் பிள்ளையின் வேலை வாய்ப்புகள் பாதிக்கப்படும். அவனுடைய எதிர்காலம் பூஜ்யமாகிவிடும். இந்து என்று கொடுத்தால் தான் சலுகைகள் கிடைக்கும் என்று சொன்ன போது. இவர்கள் சொன்னார்கள் நாங்கள் வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்று கொண்டோம், அவரை ஆராதிக்கிறோம். நாங்கள் முப்பது முக்கோடி தேவர்களை வணங்கினோம் அதை விட்டு விட்டு மெய்யான ஒளிக்குள் வந்திருக்கிறோம் இப்பொழுது ஜீவனுள்ள தேவனை நாங்கள் வணங்குகிறோம் இப்படியிருக்க எங்கள் பிள்ளைகளை சலுகைகளுக்காக அந்த விட்டு விட்டு வந்த தெய்வங்களின் நாமத்தை சார்ந்தவர்கள் என்று பொய்யாக அறிக்கையிட மாட்டோம் என்றார்கள். இன்றைக்கு அநேக பரம்பரை கிறிஸ்தவர்கள் ஆவிக்குறிய சபைக்கு செல்கிறவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சலுகை கிடைக்க வேண்டும் என்பதற்க்காக தங்கள் பிள்ளைகளை இந்து மதத்தை சேர்ந்தவர்கள் என்று பொய்யாக அறிக்கையிடுகிறார்கள். பிரியமானவர்களே இப்படி செய்வதால் தாம் அரசாங்கத்தையும் மேலும் நம்மை சிருஷ்டித்த தேவனையும் ஏமாற்றுகிறோம். மத்தேயு 10:33 மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னார்.

2தீமோத்தேயு 2:12 "அவரோடேகூடப் பாடுகளைஸ் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்."

ஒரு முறை ஒரு கிறிஸ்தவ டி.வி சேனலில் ஒரு குடும்பத்தினரின் சாட்சியை கேட்டேன் அந்த குடும்பம் வேறு மதத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவர்கள். பெற்றோர்கள் கல்லூரியில் விரிவுரையாளர்களாக பணிபுரிகின்றார்கள். அவர்களுக்கு இரண்டு மகள்கள், மூத்த மகள் வேதாகம கல்லூரியில் படித்து கொண்டிருக்கிறாள் இளைய மகளிடம் நீ என்ன படிக்க போகிறாய் என்று கேட்ட போது அவள் சொன்னாள் நானும் என் அக்காவை போல வேதாகம கல்லூரியில் படித்து ஆண்டவருக்கு ஊழியம் செய்ய போகிறேன் என்றாள். இன்றைக்கு புறஜாதி ஜனங்கள் கிறிஸ்துவை ஏற்று கொண்டு தேவனுக்காக வைராக்கியமாக எழும்புகிறார்கள்

பிரியமானவர்களே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்று கொண்டு சலுகைகளுக்காக ஜீவனுள்ள தேவனை வேலைத்தலங்களிலும் கல்வி ஸ்தாபனங்களிலும் மறுதலிப்பீர்களானால் முதலாவதாக உங்கள் சுற்றியுள்ள தெய்வீக பாதுகாப்பை இழந்து போவீர்கள்.ஒரு வேளை உங்களுக்கு கிடைக்கும் சலுகைகளினால் நீங்கள் இன்றைக்கு நன்றாக இருக்கலாம். ஆனால் ஜீவனுள்ள தேவனை அறிந்து கொண்ட பிறகு நான் பொய்யான தெய்வங்களை உடையவன் என்று அறிக்கை பண்ணுகிற உங்கள் மேல் பலவிதமான சாபங்கள் கடந்து வரும். என்னையல்லாமல் உங்களுக்கு வேறு தெய்வங்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்று கர்த்தர் சொல்கிறார்.நீங்கள் எந்த அளவு சத்தியத்தை அறிகிறீர்களோ அந்த அளவு உங்களிடம் எதிபார்க்கப்படும். இன்றைக்கு பணத்துக்காகவும்

வேலைக்காகவும் நான் இயேசுவின் பிள்ளையில்லை என்று கிறிஸ்துவை மறுதலிக்கிறவர்கள் அந்தி கிறிஸ்துக்கள் ஆவார்கள்.1யோவான் 2:22 பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து."அரசாங்க சலுகைகளுக்காக இந்து என்று துணிந்து பொய் சொல்லும் மாயமாலமான கிறிஸ்தவனுக்கும் 30 வெள்ளி காசுக்காக நண்பனையே காட்டி கொடுத்த யூதாசுக்கும் ஒரு வித்தியாசமுமில்லை.

எரேமியா 3:20ல் ஒரு மனைவி தன் புருஷனுக்கு துரோகம் செய்வது போல் இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள் எனக்கு துரோகம் செய்தது மெய் என்று கர்த்தர் சொல்கிறார். அதாவது சபையில் தேவனை ஆராதித்து விட்டு சலுகைகளுக்காக தன்னை இந்து என்று அறிக்கை பண்ணுகிறவர்கள் தேவனுக்கு விரோதமாக விபச்சாரம் செய்கிறார்கள். அதாவது நான் முழு இருதயத்தோடு தேவனை நேசிக்கிறேன் என்று சொல்லி கொண்டு மறுப்புறம் சலுகைகளுக்காக தேவனை மறுதலிப்பது என்பது ஒரு மனைவி தன் கணவனிடம் நான் உன்னை நேசிக்கிறேன் என்று சொல்லி கொண்டு தன் இருதயத்தில் வேறு ஒருவரை நேசிப்பதற்கு ஒப்பானதாகும்.

அதாவது அந்நிய தெய்வத்துக்கு பலியிட்டதை புசிக்க கூடாது என்று வேதம் சொல்லும் போது நீங்கள் அந்நிய தெய்வத்தின் நாமத்தை உடையவர்கள் என்று சொல்லி கொண்டு அதன் மூலமாய் வரும் ஆசீர்வாதம் நிச்சயமாக நமக்கு சாபமாக மாறும்.

யாத்திராகமம் 34:14-15 "கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது, அவர் எரிச்சலுள்ள தேவனே;ஆகையால், அந்திய தேவனை நீ பணிந்து கொள்ள வேண்டாம்.அந்தத் தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கை பண்ணுவாயானால், அவர்கள் தங்கள் தேவர்களை சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, தங்களுடைய தேவர்களுக்குப் பலியிடுவார்கள்;ஒருவன் உன்னை அழைக்கையில், நீ போய் அவன் பலியிட்டதிலே புசிப்பாய்;"

சந்திப்பின் நாளிலே ஆண்டவருக்காக வைராக்கியமாக வாழ்ந்தவர்களுக்கும், தேவனை மறுதலித்தவர்களுக்கும் தேவன் நீதி செய்வார். எனவே இந்த உலகத்தில் எந்த காரணத்துக்காகவும் தேவனை மறுதலிக்காதீர்கள்.எனக்கு ஒரு குடும்பத்தை தெரியும் அவர்கள் கிறிஸ்தவ குடும்பத்தினர்கள் தான். ஆலயத்துக்கு ஒழுங்காக போகிறவர்கள் தான்.அரசாங்க சலுகைகளுக்காக தன் பிள்ளைகளை இந்து என்று பெயர் மாற்றி பதிவு செய்தார்கள். பிள்ளைகள் படித்து நல்ல வேலைக்கு வந்தார்கள். ஒரு காலகட்டதிற்கு பிறகு ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நோய்களும் பிரச்சனைகளும் அகால மரணங்களும் கடந்து வந்தன. இன்றைக்கு அந்த குடும்பம் சின்னாபின்னமாகிவிட்டது.

தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவ்விசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் இல்லாதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள் என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. எனவே பிரியமானவர்களே வானத்தையும் பூமியையும் படைத்த ஜீவனுள்ள தேவன் மேல் விசுவாசம் வையுங்கள். அழிந்து போகிற உலக இச்சைகளுக்காக தேவனை விட்டு விலகி சலுகைகள் மேல் நம்பிக்கை வைக்காதீர்கள். நம்முடைய இலக்கு பரலோகம் என்பதை மறந்துவிடாதீர்கள். உலகமும் அதன் ஆசை இச்சைகளும் ஒழிந்து போகும் என்று வேதம் சொல்கிறது. பணம் சம்பாதிப்பதற்காக தேவனை விட்டு விட்டு சலுகைகளுக்காக அவரை ஏமாற்றாதீர்கள்.

1தீமோத்தேயு 6:10 "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை

இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்."

நீங்கள் பணத்தின் மேல் ஆசை வைத்து தேவனை விட்டு விலகி போகும் போது முடிவில் உங்களுக்கும் தாங்க முடியாத வேதனைகள் தான் பெருகும். இரண்டு எஜமானுக்கு ஊழியம் செய்யாதீர்கள் என்று வேதம் எச்சரிக்கிறது. தேவனுக்கும் உலக பொருளுக்கும் ஊழியம் செய்ய முடியாது, தேவனையும் உலகத்தையும் நேசிக்க முடியாது. சலுகைகளுக்காக தேவனை மறைமுகமாக பகைக்கும் போது எல்லா மனிதர்களை காட்டிலும் பரிதபிக்கபட்டவர்களாவீர்கள்.

இன்றைக்கு அநேக கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நன்மை செய்வதாக நினைத்து கொண்டு சலுகைகளுக்காக புறஜாதிகள் மத்தியில் தேவனை மறுதலித்து அறிக்கையிட்டு தங்கள் பிள்ளைகளுக்கு சாபத்தை வைத்து விட்டு போகிறார்கள். அநேகர் தங்கள் பிள்ளைகளை இழந்திருக்கிறார்கள் மேலும் உலக ஆசீர்வாததிற்க்காக நித்திய ஜீவனையே இழந்து போயிருக்கிறார்கள். எபிரெயர் 6:4-6 "ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும்,பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களை ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனை தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்."

இயேசு கிறிஸ்துவை மூன்று தரம் மறுதலித்த பேதுருவை மறுபடியும் சந்தித்த ஆண்டவர் நீ என்னை நேசிக்கிறாயா என்று மூன்று தடவை கேட்டார்.மூன்று தடவை மறுதலித்த பேதுரு இப்போது மூன்று தடவை இயேசுவே பார்த்து உம்மை நேசிக்கிறேன் என்று நேர் மறையாக அறிக்கையிட்டான். அதன் மூலம் மேலான ஆசீர்வாதத்தை பெற்று கொண்டான்.எனவே பிரியமானவர்களே ஒரு வேளை நீங்கள் சலுகைகளுக்காக தேவனை மறுதலித்திருப்பீர்களானால் நீங்கள் மறுதலித்த இடத்தில் நான் கிறிஸ்துவை உடையவன் என்று அறிக்கை பண்ணுங்கள். நீங்கள் அப்படி செய்வதினால் உங்களுக்கு சில குறைவுகள் வரலாம் ஆனால் பூமியையும் அதன் நிறைவையும் உடைய ஜீவனுள்ள தேவன் உங்களை மன்னித்து மீண்டும் உயர்த்துவார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடும் போது எல்லாம் கூட கொடுக்கப்படும் என்ற வாக்குதத்ததின் மூலம் நிலையான மற்றும் நிறைவான ஆசீர்வாதத்தை பெற்று கொள்வீர்கள். காணப்படுகிற அநித்தியமானவைகளுக்காக தேவனை மறுதலிக்காதீர்கள், காணப்படாத நித்தியமானவைகளை நாடுங்கள். எனவே இந்த கடைசி காலத்தில் பவுல் சொன்னது போல ஆண்டவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டு விட்டு முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு இருதயத்தோடும், முழு பலத்தோடும் அவரை நேசிப்போம். ஆமென்.